www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

30

-செங்கை ஆழியான்-

எனவே 1734 ஆம் ஆண்டளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில்



முன்னர் இருந்த இடமாகிய யமுனா ஏரிக்குப் பக்கத்தே கிறீஸ்தவ ஆலயம் அமைக்கப்பட்டிருந்தமையால் அதே வளவில் பிறிதோரிடத்தில் ஒரு சிறு மடாலயம் அமைக்கப் பெற்றது. இம் மடாலயம் பழைய கந்தசுவாமி கோவில் இருந்த அதே இடத்திற்றானே அமைக்கப் பெற்றது எனச் சிலர் கருதுகின்றனர். இது கந்தபுராணம் படிக்கும் மடமாகவே பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இந்த மடத்திற்றானே ஒரு வேலையும் வைத்து வழிபட்டனர் போலும். இது மடலாயமாக இருந்தமையால் கோபுரம், தூபி முதலியனவின்றியேயிருந்தது. மேலும் உயர்ந்த கோபுரமுடைய கோயிலாகக் காணப்படின் ஒல்லாந்தர் அதனை மீண்டும் தரைமட்டமாக்கி விடக்கூடும் எனப் பயந்து பக்தர்கள் பெரிய கோயில் கட்டியெடுப்பாமல் அமைதியாக வழிபாடு நடத்தி வந்திருத்தல் கூடும் என ஊகிக்க இடமுண்டு.

### மடாலயம் அமைந்த இடம்

கி.பி.1734 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கோயில், யமுனா ஏரிக்கு அருகில் அமைக்கப்பட்ட மடாலயமா அல்லது இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலா என்பது முடிவு செய்யப்பட வேண்டியதொன்றாகும். யாழ்ப்பாண அரசாங்க அதிபராக 1869 தொடக்கம் 1896 வரை கடமையாற்றிய சேர். துவைனம் அவர்களின் குறிப்புக்களிலிருந்தும் 1882 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள சைவசமயக் கோயில் இடாப்பிலிருந்தும் இன்றைய கோயில் 1734 இல் இரகுநாத மாப்பாண முதலியாரால் கல்லினாலும் செங்கற்களினாலும் கட்டப் பெற்று ஓட்டினால் வேயப்பெற்றது என்பதாகும். இது ஏற்புடையதன்று. உண்மையில் யமுனா ஏரிக்கு பக்கத்தில் நிறுவப்பட்ட கந்தமடாலயமே 1734 ல் அமைக்கப்பட்டது எனக் கொள்ளவேண்டும். 'இக்கோயிலின் அதிகாரிகளுள் ஒருவராயிருந்த மாப்பாண முதலியார் 1809 ஆம் ஆண்டில் பிரித்தானிய அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த பெட்டிசமொன்றில் இக்கோயில் 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்றதெனக் குறிப்பிட்டுள்ளார். அதன் படி நோக்கில் இன்றைய கந்தசுவாமி கோவில் 1749 இல் கட்டப்பட்டது எனக் கொள்ளவேண்டும். அதாவது யமுனா ஏரிக்கு அருகில்கந்த மாடலயம் கட்டப்பட்டு 15 வருடங்களின் பின்பாகும். மேலும் முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் இன்றைய கோயில் 1793 இல் அமைக்கப்பட்டது எனக் குறிப்பிடுகின்றார்.

எனவே 1749 ஆம் ஆண்டளவில் கிருஷ்ணையர் சுப்பையரும் வேறு சைவ சமயிகள் பலரும் கந்தசுவாமி கோயிலை மீண்டும் ஆலயமாக அமைக்கும் விருப்போடு அரசாட்சியாளருக்கு விண்ணப்பஞ் செய்தனர். ஒல்லாந்தர் காலத்தில் மலபார் சமயத்தை (சைவம்) க் கைக்கொண்டொழுகிய தனியார் சிலர், ஒரு காலத்தில் புகழ் பூத்திருந்து பின்னர் அழிவுற்ற கந்தசுவாமி கோயிலை மீண்டும் கட்டுவதற்கு ஒல்லாந்த அரசுக்கு விண்ணபித்தனர். அக்கோயிலைக் கட்டுவதற்கான ஒருவகை உறுதி வழங்கப்பட்டது. பொதுமக்களிடம் சேகரிக்கப்பட்ட நிதியைக் கொண்டு கந்தசுவாமி கோயில் அர்ச்சகரின் சந்ததியோராகிய சில பிராமணர், அரசாட்சியாருக்கோர் விண்ணப்பஞ் செய்து, கோயில் அமைக்க உத்தரவு பெற்று, முன்னே கோயிலிருந்த விடமாகிய யமுனா ஏரிக்குப் பக்கத்தே கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப்பட்டிருந்தபடியால், 'பிராமணவளவு' (குருக்கள் வளவு) என்னும் தங்கள் உரிமைக் காணியில் சிறு கோயில் ஒன்றமைத்துத் தாங்களே வணங்கி வந்தனர். இக்கோயிலிருக்கும் இடம் அம்பலவாணர் கந்தப்பச் செட்டி பெயரில் தோம்பு பதியப்பட்டிருக்கிறது' என முதலியார் செ. இராசநாயகம் கூறியுள்ளார். இவ்வாறு குருக்கள் வளவில் இன்றைய கந்தசுவாமி கோயிலை நிறுவுவதற்கு அக்காலத்தில் ஒல்லாந்தர் பணிமனை (கச்சேரி) யில் சிறாப்பராகக் கடமையாற்றிய தொன்யுவான் மாப்பாண முதலியார் உதவி புரிந்துள்ளார். 'ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சிறாப்பராக் கடமை பார்த்து வந்த தொன்யுவான் மாப்பாண முதலியார் தமது பதவி காரணமாக் தமக்கிருந்த செல்வாக்கை பயன்படுத்தி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் கட்டுவதற்கு உத்தரவு பெற்றார், என குலசபாநாதன் தனது நூலில் குறிப்பிடுகிறார். கிறிஸ்தவராக இருந்த தொன்யுவான் மாப்பாண முதலியாருக்கு ஒரு சைவக்கோயிலை கட்டுவதற்கு ஆட்சியாளர் அனுமதி வழங்கியிருப்பார்கள் என்பது ஏற்றதாகாது.

### நான்காவது ஆலயம்

பறங்கிகளாலிடிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகரின் சந்ததியோராகிய கிருஷ்ணையர் சுப்பையர் மீண்டும் அக்கோயிலை அமைக்க விண்ணப்பித்போது அந்த விண்ணபத்திற்கு உத்தரவு பெற்றுக் கொடுத்தவர் தொன்யுவான் மாப்பாண முதலியார் ஆவர். சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் முதன் மந்திரியாக இருந்த புவனேகவாகு முதன் முதல் கந்தசுவாமி கோவில் அமைத்த அதே இடத்தில் புதிய ஆலயத்தை அமைப்பதற்கு ஒல்லாந்த ஆட்சியாளர்கள் அனுமதி வழங்கினர். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்துள்ளன என ஊகிக்கலாம். ஒன்று கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகிலிருக்கும் கந்த மடாலயத்தை அவ்விடத்தினின்றும் அகற்றும் நோக்கம். இரண்டு, தமது வர்த்தகத்திற்கு போட்டியாளராக அமைந்த முஸ்லிம்களை குருக்கள் வளவிலிருந்து அகற்றும் நோக்கம். எனவே ஆட்சியாளர்கள்,குருக்கள் வளவை , கந்தசுவாமி கோயிலமைக்கத் தோம்பு எழுதிக் கொடுத்தனர். அம்பலவாணர் கந்தப்செட்டி எனக் கந்தவேளின் பெயரிலேயே தோம்பு பதியப்பட்டது. அம்பலவாணர் சுப்பிரமணியம் என நல்லூர்க் கந்தசுவாமி பேரில் பதியப்பட்டதாக குலசபாநாதன் கூறுவார். கிருஷ்ணையர் சுப்பையர் ஆலயத்தை அமைப்பதற்காக ஊர் ஊராக நிதி சேகரித்தார். அவருக்குப் பல வகைகளிலும் உதவியாக இருந்தவர் தொன்யுவான் மாப்பாண முதலியார் ஆவர். எனினும் அ[வர்] நேரடியாக ஆலயத் திருப்பணியில் ஈடுபடமுடியாதிருந்தமையால் மைந்தன் இரகுநாத மாப்பாண முதலியாரை ஆலயத்திருப்பணியில் முழுமூச்சாக ஈடுபட வைத்தார் எனக் கொள்ளலாம்.

தொன்யுவான் மாப்பாண முதலியாருக்கு இரகுநாத மாப்பாண முதலியார் எனவும் பெயர்' என குலசபாநாதன் குறிப்பிடுவது ஏற்றதாக இல்லை. தந்தைக்கும் மகனுக்கும் ஒரே பெயர்.இருக்க வாய்ப்பில்லை. அவர் முதல் கிறஸ்தவராதலால் அவ்வழக்கப்படி மாப்பணர் என்ற நாமம் அவரது குடும்பப் பெயராகி பிள்ளைகளுக்கும் சேர்ந்து வழங்கப்பட்டது. மாப்பாண முதலியாரின் மகன் இரகுநாத மாப்பாண முதலியார் என மாப்பாண வம்ச பரம்பரை தெளிவாக சுட்டும்போது , மாப்பாண முதலியாரை இரகுநாதன் மாப்பாணர் எனவும் அழைப்பர் என்பது பொருத்தமற்றதாகும். கோயிற்றாபகர் அவரென வலியுறுத்தும் பொருட்டு இது வலிந்து கொள்ளப்பட்ட கூற்றாகும்.



.(தொடரும்)